Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 04 | (29 - 08 - 1992) | வியாழக்கிழமை | ஓசை 184

## சுயதொழில் விருத்திக்கு கடன் வழங்கி ஊக்குவிப்பு

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் வாய்ப்பிழந்து, இடம் பெயர்ந்து வாழ்பவர்களுக்கு கடன் வழங்கி சுயதொழில் வாய்ப்புகளைமற்றும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் ஊக்குவித்து வருகிறது. தமிழ் மக்கள் நெருக்கடியான கால கட்டத்திலும் சுயமாய் தொழில் செய்து வாழ ஆர்வமுடையவர்கள் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது இத்திட்டத்தின் கீழ் சிறு கைத்தொழில் நிறுவனங்கள் வன்னிப் பிராந்தியத்திலும் அமைக்கப்பட்டு வருகின்றன தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து கெற்பலி, பண்டிதர்குடியிருப்பில் வாழ்பவர்களுக்கு சுயசார்புத் தொழில் முயற்சியின் கீழ் குடிசைக் கைத்தொழில் நிலையங்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

( வடக்கு கிழக்கு போரில் )

# ராணுவத்தின் புதிய தந்திரோபாயம்

# உயிர்ச் சேதத்தை குறைக்க முடிவு

## பெருகி வரும் இழப்பால் எழுந்த சிக்கல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் நடைபெற்று வரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் புதிய தந்திரோபாயங்களை மேற்கொள்ள உயர் இராணுவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். தீவிர பரிசீலனையின் பின் மேற்கொள்ளப்படவுள்ள இத் தந்திரோபாயம் இராணுவத்தினரின் உயிரிழப்பையும், காயமடையும் தொகையையும் குறைக்கும் நோக்கம் கொண்டதாகும். விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாககுதல்களினால் பெரும் எண்ணிக்கையினர் கொல்லப்படுவதையும். காயமடைவதையும் தொடர்ந்தே இப் புதிய தந்திரோபாயம் வகுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்குமுன் ஜூன் 11 ஆம் திகதி யுத்தம் மீளவும் ஆரம்பித்த காலம் முதல் 7,850 பாதுகாப்புப் படையினர் காயப் பட்டுள்ளதாக உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. காயப்பட்டவர்களில் பலர் பாரிய காயங்களுக்கு உட்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயப்பட்ட 7,850 பாதுகாப்புப் படையினரில் 7,621 பேர் சிறிலங்கா தரைப்படையைச் சேர்ந்தவர்கள். இக்காலப்பகுதியில் காயப்பட்ட இராணுவத்தினரில் 303 பேர் யுத்த முனைகளில் முன்னணியில் செயற்பட்ட கனிஷ்ட அதிகாரிகளாவர்.

கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் புலிகளின் தாக்குதலுக்குஉள்ளாகி காயப்பட்ட விமானப்படை மற்றும் கடற்படையினர் பற்றிய சரியான தரவுகளைப் பெற முடியாதிருப்பதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏலவே திட்டப்பட்ட இராணுவ நடவடிக்கைத் திட்டங்களில் சில மாற்றங்களைச் செய்து திட்டமிட்டபடி வடக்கில் தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கப்போவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தரப்பில் கூறப்படுகிறது.

மேலும் ஆகஸ்ட் 8 இல் கண்ணி வெடியில் சிக்கி எதிர் பாராத வகையில் மூத்த இராணுவ அதிகாரிகள் இறந்ததால் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைச் சமாளிப்பதற்கு வட பகுதி யுத்த தந்திரோபாயங்களில் சில மாற்றங்களைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்

## 81 தடவை கூடிய சர்வகட்சி மாநாடு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக அமைக்கப்பட்ட சர்வகட்சி மாநாடு 81 தடவைகள் கூடியுள்ளது என்றும், நூற்றுமுப்பத்திநான்கரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றும் சிறிலங்கா பிரதமர் டி.பி. விஜயதுங்கா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய டி பி விஜயதுங்க அங்கு எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கும் போது இதனை தெரிவித்தார்.

இவற்றுக்கான முழுச்செலவு பதினெட்டு லட்சத்து நாற்பது ஆயிரம் ரூபாய் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஷெல் வீச்சு

தீவகத்திலிருந்து நேற்றும் யாழ். நகரப் பகுதியைநோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது

நேற்று மாலை 6-30 மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலின்போது நகரக்கரையோரப்பகுதியில் ஓர் எறிகணை வீழ்ந்து வெடித்தது இத்தாக்குதலினால் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை

பாதுகாப்பு வலயத்தினுள் சூடு ;

## ஓர் ஒப்பந்த மீறல்; செஞ்சிலுவை அதிகாரி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பகுதி பாதுகாப்புவலயத்தினுள்சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சன்னங்கள் விழுந்து சேதம் உண்டாக்கி இருக்கின்றமை ஓர் ஒப்பந்த மீறல் ஆகும் என்று யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி பொன்சுவா கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில் மண்டைதீவுப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் நேற்று முன்தினம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தால் சன்னங்கள் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் விழுந்துசேதத்தை ஏற்படுத்தியுள்ளன இதுஓர் ஒப்பந்த மீறல் என்றும், இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்

## எவரும்பாதிக்காதவகையில் பல்கலைக்கழக அனுமதி

(கொழும்பு)

இந்த ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதியில் எவருமே பாதிக்கப்படாதிருப்பதை உறுதிசெய்யும் வகையிலான திட்டமொன்றை வகுப்பதில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

- ஹமீத்

என்று உயர்கல்வி அமைச்சர் ஏ சி. எஸ் ஹமீட் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஹமீட் நேற்று முன்தினம் இதனை அறிவித்தார்.

## ஏழைச் சிங்கள இளைஞரின் இரத்தத்தில் ஆட்சி நடக்கிறது

### சிங்கள சிப்பாயின் கடிதம்

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளில்

செய்ய மனிதாபிமானமற்ற அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதாக

கோரிக்கை விடப்பட்டுள்ளது.

உயர் மட்டங்களிலிருந்தும்,

## யுத்தம் பற்றி அதிகாரிகள் உண்மை தகவல் தருவதில்லை

வடக்கிலும், கிழக்கிலும்

# இரத்தத்தில் ஆட்சி நடக்கிறது

## சிங்கள சிப்பாயின் கடிதம்

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சாதாரண - கிராமப்புற - ஏழ்மையில் வாடும் குடும்பங்களை சேர்ந்த இளைஞர்களின் நிலை பரிதாபத்திற்கு உரியதாக இருப்பதாக சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் ஏ. எவ். பி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர், கிராமப்புற இளைஞர்களின் ஏழ்மையிலும் வறுமையிலும் அரசு ஆட்சி நடத்துவதாகவும், தொடர்ந்து முப்பத்தாறு மணித்தியாலம் முதல் நாற்பத்தெட்டு மணித்தியாலம் வரை வேலை செய்ய மனிதாபிமானமற்ற அதிகாரிகள் நிர்ப்பந்திப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு ஐந்து மணி நேரம் கூட தூங்குவதற்கு கிடைப்பதில்லை எனவும் புகாரிடப் பட்டுள்ளது.

அத்துடன், உயர் அதிகாரிகள் அதிகாரத்தை நிலைநாட்டியும், கட்டுப்பாட்டை வலியுறுத்தியும் கடமையில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறந்தவர்களுக்குப் பூமாலை போடுவதைவிடவும் அரசாங்கம் இருப்பவர்களை மனிதாபிமானத்துடன்நடத்த வழியேற்படவேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

உயர் மட்டங்களிலிருந்தும், செல்வாக்கான குடும்பங்களில் இருந்தும் இராணுவத்திற்கு வருபவர்கள் அதிகாரிகளாக நியமனத்தைப் பெறுகின்றார்கள் என்றும், சாதாரண கிராமப்புற இளைஞர்கள் தான் பலிக்கடாக்களாக்கப்படுகின்றார்கள் என்றும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுத்ளது

மேலும் ஆகஸ்ட் 8 இல கண்ணி வெடியில் சிக்கி எதிர்பாராத வகையில் மூத்த இராணுவ அதிகாரிகள் இறந்ததால் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைச் சமாளிப்பதற்கு வடபகுதி யுத்த தந்திரோபாயங்களில் சில மாற்றங்களைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது படையினருக்கு போர் முனையில் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைப்பது தான் தமது நோக்கமாகும் என்றும் அதே வட்டாரங்கள் கூறுகின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி தளபதியாக ஜெரி சில்வா பதவி ஏற்றார்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜெரி.டி. சில்வா கடந்த வார இறுதியில் வடபகுதி தளபதியாக உத்தியோக ரீதியாகப் பதவி ஏற்றார். மேஜர் ஜெனரல் ஜெரி. டி. சில்வா தனது 52 ஆவது வயதில் இத் தளபதி பதவியை ஏற்றுள்ளார்.

1980 ஆம் ஆண்டில் இருந்து வடபகுதியில் பல்வேறு இராணுவ நடவடிக்கைகளிலும் பங்கெடுத்துக்கொண்டு 1981 ஆம் ஆண்டில் லெப்டினன்ட்கேணலாக பதவி உயர்வுபெற்றவர். ஐந்து வருடங்களின் பின்னர் 1986 ஆம் ஆண்டில் பிரிகேடியராக பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கமாண்டராக நியமிக்கப்பட்டார். அத்துடன் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியாகவும் கடமையாற்றினார். இப் புதிய பதவியை ஏற்பதற்கு முன்னால் கிழக்கு மாகாண மூன்றாம் பிரிவின் ஆணையிடும் பொது அதிகாரியாக கடமையாற்றினார்.

சென் ஜோசப் கல்லூரியின் பழைய மாணவரான இவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜே. வி. பி கிளர்ச்சியின் போது

# சிசிலின் உதவியாளரான பிரிகேடியர் அல்கம

(கொழும்பு)

கிழக்குப் பிராந்தியத்தில் மூன்றாம் பிரிவின் ஆணையிடும் பொது அதிகாரியாக பிரிகேடியர் சூல அசோக லக்ஷ்மன் அல்கம நியமனம் பெற்றுள்ளார்.

ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் 1963 இல் இரண்டாம் லெப்டினனாக ராணுவத்தில் சேர்ந்தார். ஆரம்பபயிற்சியை தியத்தலாவ இராணுவக் கல்லூரியில் பெற்று தியத்தலாவை முதல் கெமுனுவோச் படைப் பிரிவில் சேர்ந்தவர் ஆவார்.

யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் கடத்தல், கள்ளக் குடியேற்றத்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். பலாலியில் இருந்த குடியேற்றத் தடைப் பிரிவின் அதிகாரியாக கடமையாற்றியவர். 1971 கிளர்ச்சியின்போது அனுராதபுர பிரிகேடியர் அபயசேகராவின் இணைப்பதிகாரியாகவும் 1985 முல்லைத்தீவு இணைப்பதிகாரியாகவும் கடமையாற்றியவர்.

1990 தென் மாகாண கமாண்டராக நியமிக்கப்பட்டு ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் நடத்தும் சூழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் காணிகளில் முஸ்லிம்கள் குடியேற்றம்

[திருமலை]

திருமலைமாவட்டத்தில்தம்பலகாமம் பகுதியில் உள்ள தமிழர்களின் காணிகளில் முஸ்லிம்கள் அத்துமீறி குடியேறி வருவதாய் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம், தம்பலகாமம் பகுதி தமிழர்கள் அகதிமுகாம்களில் பெரும் நெருக்கடிகள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் பாலம் போட்டாற்றில் சிங்கள, முஸ்லிம்கள் மத்தியில் குடியேற்றப் பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசமாக தம்பலகாமம் பகுதிசிங்களவராலும் முஸ்லிம்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

# ஐந்து தமிழ் இளைஞர் தேற்றாத் தீவில் கைது

(மட்டக்களப்பு)

தேற்றாத்தீவில் ஐந்து தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இத் தீவைச்சுற்றி வளைத்த இராணுவத்தினரே அப்பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்றுள்ளனர்

இச்சம்பவத்தின் போது மட்டக்களப்பு - கல்முனை போக்குவரத்தும் தடைப்பட்டதாக தெரியவருகிறது.

இதேவேளை கடந்த சனிக்கிழமை கொம்மாதுறையைச் சுற்றி வளைத்துகைது செய்யப் பட்ட 50 பேரில் மூவர் இது வரை விடுவிக்கப்படவில்லை கடந்த 12 ஆம் திகதி முறக்கொட்டாஞ்சேனை கிராமத்தில் கைதான 9 பேர்பற்றி இதுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# யுத்தம் பற்றி அதிகாரிகள் உண்மை தகவல் தருவதில்லை

## பத்திரிகையாளர் கண்டனம்

வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறும் யுத்தம் பற்றி தகவல் தரும் அதிகாரிகள் சிங்கள மக்களுக்கு உண்மைத் தகவல்களை தருவதில்லை. இதனால் டென்சில் கொப்பேகடுவ போன்ற உயரதிகாரிகளின் மரணம் தொடர்பாக அரசின் மீது இன்னமும் சந்தேகம் நிலவுகின்றது. இந் நிலைமையில் உண்மைநிலவரங்களை மக்கள் அறியத்தக்கதாக வெளியிடுவது பத்திரிகையாளர்களின் கடமையாகும்.

இவ்வாறு சிறிலங்காவின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான லூசியன் ராஜ கருணா கூறியுள்ளார்.

அத்த பத்திரிகையின் கார்ட்டூனிஸ் ஜிப்றி யூனூஸ் கத்திக் குத்துக்கு இலக்கானமை தொடர்பாக கண்டனம் தெரிவிக்கவும், பத்திரிகையாளர்களின் பாதுகாப்பை வலியுறுத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பத்திரிகையாளர் மீது தாக்குதல்; கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(கொழும்பு)

இலங்கையில் செய்தியாளர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படுவதைக் கண்டித்து அனைத்துபத்திரிகையாளர்களும் இணைந்துநேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் மறியல் போராட்டத்தையும் நடாத்தி அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு மரண ஊர்வலம் ஒன்றில் செய்தியாளர் ஒருவர் மிருகத்தனமாகத் தாக்கப் பட்டார். மேலும் அத்த பத்திரிகை கேலிச்சித்திரக்காரரர் பயமுறுத்தப்பட்டார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் றிச்சேர்ட் சொய்ஸா என்ற செய்தியாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவற்றிற்கெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பத்திரிகையாளர்போராட்டம் நடத்தினார்கள்.

சுமார் முந்நூறு பேர் இப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். ''அரசின் காடைத் தனத்தைக் கண்டிக்கிறோம்'', ''செய்திச் சுதந்திரம் வேண்டும்'' ''எங்கள்சக்தி பேனாதான் கையை வெட்டினாலும் எழுதுவோம்'' ''இந்த எச்சரிக்கை குண்டர்களுக்கே'' என்ற சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

சண்டே ஐலன்ட் பத்திரிகையின் ஆசிரியர் காமினி வீரக்கோன் இருபது ஆண்டுகளாக கருத்துச் சுதந்திரத் தடை, அவசரகாலச் சட்டம், செய்தித்தணிக்கை ஆகியவற்றிற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 'அத்த' கார்ட்டூனிஸ்ட் கத்தி குத்துக்குஇலக்கானார்

## கொலை செய்யப்போவதாக மிரட்டல்

கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகையான 'அத்த' இதழின் கேலிச் சித்திரக்காரர் (கார்ட்டூனிஸ்ட்) ஜிப்றியூனாஸ் அண்மையில் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார். இது அரசுக்கு ஆதரவான தண்டர்களின் திட்டமிட்ட செயல் எனத் தெரியவருகிறது. இவர் அரசையும், பிரேமதாசாவையும் நையாண்டி செய்து கேலிச் சித்திரங்கள் வரைந்து வந்துள்ளார்.

இந்தக் கேலிச் சித்திரக்காரரின் வீட்டிற்கு கடந்த திங்கட்கிழமையன்று இரவு சென்ற இருபது பேரைக்கொண்ட கும்பலொன்று அவரைகொலை செய்யப் போவதான மிரட்டலை அவரது மனைவியிடம் தெரிவித்திருந்தது இவர் வரைந்திருந்த ஏராளமான சித்திரங்களையும் அபகரித்துக்கொண்ட இக் குழுவினர் இனிமேல் பிரேமதாசாவை கேலிச் சித்திரமாக கீறக் கூடாது என எச்சரிக்கையும் விடுத்திருந்தது.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட சிலர் இனங்காணப்பட்டு பொலிசாரிடம் புகார் தெரிவிக்கப்பட்டபோதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(4 ஆம் பக்கம் பார்க்க)

**காடு நகரமானால்**
**நாடு நரகமாகும்**

நல்லூர் [illegible] நூலகம் [illegible] யாழ்ப்பாணம்

## வரி விளம்பரம்


### புதிய மீரா நாவல்

பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் படித்துப் புகழும் நாவல்கள். நீங்களும் படித்துப் பாருங்கள். இதுவரை வெளி வந்த இருபத்தியொரு ''மீரா'' நாவல்களில் எட்டு நாவல்கள் மட்டுமே விற்பனைக்குண்டு. உங்கள் பிரதிக்கு முந்துங்கள். விரைவில் ''இயல்வாணன்'' எழுதிய ''சுவடுகள்''.
(3040)

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள சுவிஸ் மணிக்கூடுகள் Roamer, WylerTitoni, Westend Mondia, Favreleuba, Seiko, Citizen போன்றவை Rs.200/- முதல் பல விலைகளிலும் உண்டு. கடிகாரங்கள், றேடியோக்கள் திருத்திக் கொள்ளவும், உத்தரவாதத்துடன் வாங்கவும் டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3046)

### புலமைப் பரிசில் பரீட்சை ( ஆண்டு 5 )

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடாத்தப்பட்ட மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை (Printed) பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெறுவோருக்கு விஷேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(3048)


# முத்தரப்பு பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

### --செல்லச்சாமி வலியுறுத்து

(மாத்தளை)

இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்று தொடர்ந்து இங்கு வாழ்ந்துவரும் மலையக மக்களைப் பலவந்தமாக நாடு கடத்த முடியாது என்பதைச் சிறிலங்கா அரசு உணரவேண்டும். வெறும் சட்டங்களையும், ஒப்பந்தங்களையும் உருவாக்கி இவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. முத்தரப்புப் பேச்சுவார்த்தை மூலமே இவர்களது பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி கூறியுள்ளார்.

அவர் மேலும், இ. தொ. கா. வும், இலங்கை அரசும், இந்திய அரசும் இணைந்து புரிந்துணர்வுடன் முத்தரப்புப் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தி மனிதாபிமான முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அமைதி இன்மையை உருவாக்கத் தங்களால் இயன்ற கைங்கரியங்களை எல்லாம் பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் சிலர் செய்து வருகின்றனர், தற்போதைய மக்கள் புத்திசாலிகள். யார் எதைக் கூறினாலும் நன்கு சிந்தித்து செயல்படுபவர்கள். எனவே இவர்களது போலிவார்த்தைகளில் மதிமயங்கி இந் நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட அவர்கள் இடமளிக்க மாட்டார்கள்.

மேலும் இவர்கள் கூறும் போது நாட்டை விட்டு ஓடிவிட மலையகமக்கள் ஒன்றும் அனாதைகள் அல்லர், ஆதரவு அற்றவர்களும் அல்லர். வழிகாட்டிகள் இல்லாதவர்களும் அல்லர்.

ஜே. வி. பி. காலத்தில் தோட்ட நிர்வாகிகள் ஒரு துண்டுப் பிரசுரத்திற்குப் பயந்து இரவோடிரவாக தோட்டத்தை விட்டு ஓடிய போது தொழிலாளி தான் உழைத்து வாழும்தோட்டத்தை உயிரை விட மேலாக மதித்துப் பாதுகாத்தான். இத்தகைய தியாகிகளை இந் நாட்டை விட்டு விரட்டிவிட எந்த சக்தியாலும் முடியாது. என்றார்.

## வேலணை கூட். சங்கத்தில் மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கம் நேற்று தனது பாவனையாளரிற்கு 3 ஆவது சுற்று மண்ணெண்ணெய் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் முதல் இரு சுற்றுக்களையும் எடுக்காத பாவனையாளரிற்கு இந்த 3 ஆவது சுற்றுடன் சேர்த்துப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அதன் பொது முகாமையாளர் தெரிவித்திருக்கிறார்.

## கலிபோர்னியா பல்கலையில் தமிழ்த்துறை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் தமிழ்துறை மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தமிழ் மொழியிலும் தமிழர் பண்பாட்டிலும் ஈடுபாடுள்ள ஒரு அமெரிக்க கல்விமான் மேற்கொண்ட தீவிர முயற்சியின் விளைவாகவே இத்துறை ஆரம்பிக்கப்படவுள்ளது இவர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்கை நெறியில்பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ் துறைக்கான நம்பிக்கை நிதியம் ஒன்றை ஆரம்பிக்கும் பணியை அமெரிக்க தமிழ் சங்கம் தொடங்கியுள்ளது.

## இடைக்கால நிர்வாகம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினால், வலி வடக்கு பிரிவிற்கு இடைக்கால நிர்வாகம் நியமிக்கப்பட்டுள்ளது.

இந் நிர்வாகமே வலி வடக்குப் பிரிவுக் கடமைகளையும், தேர்தல் சம்பந்தமான விடயங்களையும் கவனித்து வருமென யாழ் கிளையின் இடைக்கால நிர்வாகம் அறிவித்துள்ளது.

### விண்ணப்பம் கோரல்

[கொழும்பு]

கல்விச் சேவைச் சபை தராதர பத்திர மற்ற தொழில் நுட்ப, கைப்பணி உதவி ஆசிரியர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் 4-9-92 க்கு முன்னர் கல்விச்சேவைச் சபைக்கு அனுப்பி வைக்கப்


கிறிஸ்த சேவ ஆச்சிரமம்
மருதனாமடம் - சுன்னாகம்

### 53-வது ஆண்டு விழா

ஆகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை (21-8-92)

நிகழ்ச்சி நிரல்

காலை 7-00 மணி பரிசுத்த நற்கருணை ஆராதனை
காலை 9-00 மணி தோத்திர ஆராதனை
மு.ப 11-00 மணி கலந்துரையாடல்
ந.ப 12.00 மணி மன்றாட்டு ஜெபம்


### வீதி விபத்து

[தென்மராட்சி]

தென்மராட்சிப் பகுதியில் நடைபெற்ற இரு வீதி விபத்துகளில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கனகம் புளியடிச் சந்தியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மினிவான் - சைக்கிள் - மாட்டுவண்டிவிபத்தில் சைக்கிளில் வந்த வரணி இயற்றாலையைச் சேர்ந்த சிவராஜா விக்னேஸ்வரமூர்த்தி[வயது27] என்பவர் படுகாயமுற்றார்.

இதேவேளை மீசாலையில் நடைபெற்ற மோட்டார்சைக்கிள் - சைக்கிள்விபத்தில் சைக்கிளில் வந்த மீசாலையைச் சேர்ந்த செல்லையா ரவி [வயது 27] என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். [35]

மண்டூர் வைத்தியசாலையில்

## ஊழல் மற்றும் மோசடிகளால் 50 லட்சம் ரூபாய் விரயம்

(மண்டூர்)

மண்டூர் அரசினர் வைத்திய சாலைகளில் ஊழல் மோசடி போன்ற துஷ்பிரயோகங்களால் கடந்த நான்கு வருடங்களுள் 50 இலட்சம் ரூபா விரயம் செய்யப்பட்டுள்ளது.

இவ்ஊழல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள இரு அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரத்னவால் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு தமது முதற்கட்ட விசாரணையை பூர்த்தி செய்துள்ளது இவ்வைத்தியசாலையைச் சேர்ந்த பலமட்டத்திலான ஊழியர்கள், அதிகாரிகளை மாகாணசபை அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மருந்துப்பொருள்கள் அபகரிக்கப்பட்டமை, வைத்திய சாலை வேலைத்திட்டங்களில் மோசடி, கடமை ஒழுங்கீனம் அன்பளிப்பு பொருள்கள் மாயமாகமறைந்தமை போன்ற பலவித புகார்கள் மாகாணசபைக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### மோசடி குறித்து விவாதம்

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலும் நிலவும்மோசடிகள், ஊழல்கள் என்பன குறித்து விசேட விவாதம் ஒன்றை பாராளுமன்றத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இனவாதத்தை முன்வைத்து பிரச்சினை தீர்க்க முடியாது

### - சரத் குணவர்த்தன

(மாத்தறை)

இனவாதத்தை முன்வைத்து இந்த நாட்டிலே எந்த ஒரு பிரச்சினையையும் தீர்த்து விட முடியாது. ஐ. தே. க. வையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் நம்பி மக்கள் ஏமாந்த காலம் மலை ஏறி விட்டது. இனி இக்கட்சிகளுக்கு மக்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள்.

இவ்வாறு ரத்கம தொகுதியிலுள்ள வில்லகொடையில் மக்கள் கட்சிக் கிளையின் கூட்டமொன்றில் மக்கள் கட்சியின் உபதலைவர் சரத்குணவர்த்தன பேசும்போது தெரிவித்தார்.

பதவிக்கு வருவதற்கு எமக்கு ஆசை கிடையாது மக்கள் முன் வந்து இரட்டை நாக்குடன் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பேசுவோரை நூதனசாலைக்குத்தான் அனுப்பி வைக்க வேண்டும்

இப்பகுதி மக்கள் தும்புத் தொழில், சுண்ணாம்பு கற்கள் முதலிய தொழில்களிலேயே தமது குடும்பத்தை நடாத்தி வந்தனர் அரசின் பலவீனத்தால் அவை ஒழிக்கப்பட்டு விட்டன. இது போன்ற அரசாங்கம் இனியும் பதவிக்கு வருவதற்கு இடம் வைக்க மாட்டோம் மக்களின் முன் உண்மையைக் வெளிக்கொண்

## 'சர்வோதயத்தை' அழிக்க முயற்சிகள் நடக்கின்றன

### -ஆரியரத்ன குற்றச்சாட்டு

(கொழும்பு)

நான் இன்னும் அரசியலில் குதிக்கவில்லை அப்படிக் குதிப்பதானால் எனது 83 இலட்சம்உறுப்பினர்களுடனும்தான் குதிப்பேன் அந்த நிலைக்கு என்னை ஆளாக்கி விட வேண்டாம் என அண்மையில் ரத்கமகபுமுழுகொட எனும் இடத்தில் சனசமூக நிலையம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய சர்வோதயத் தலைவர்கலாநிதி ஏ. ரி ஆரியரத்ன தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் நான் என்ன தவறைச் செய்தேன் என்று இன்னும் எனக்கு விளங்கவில்லை இரவு பகலாக நான் கண்டே அறியாத ஒரு கூட்டம் என்னையும் எனது செயற்திட்டங்களையும் நாசமாக்க முனைந்து வருகிறது நாடு முழுவதிலும் எமக்கு 890 கிராமங்கள் உள்ளன அவற்றிலுள்ள அங்கத்தவர்கள் ஊழியர்களின் பின்னே இரகசியப் பொலிசாரை அனுப்பி அவர்களைப் பயமுறுத்தி சர்வோதய இயக்கத்தை அழித்துவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுச்சிக் கிராமங்கள் உருவாக்கப்பட்ட போதெல்லாம் தொண்ணூறு வீதமான வீடுகளை நாங்களே நிறுவிக் கொடுத்தோம் அப்போதெல்லாம் இடதுசாரி நண்பர்கள் சிலர் இவ்வாறு செய்யவேண்டாமென புத்தி கூறினார்கள் அவர்கள் அன்று கூறிய புத்திமதிகளின் அர்த்தங்களை இப்போதுதான் புரிந்து கொண்டேன் எனத் தெரிவித்தார்.

நான் அச்சு இயந்திரத்தை கொண்டு வந்தது இயக்க உறுப்பினர்களுக்கான அறிவித்தல்களையும் கடிதங்களையும் பிரசுரிப்பதற்காகவே அன்றி அரசுக்கெதிரான துண்டுப்பிரசுரங்களையும் அனாமதேய பிரசுரங்களையும் பிரசுரிப்பதற்கல்ல. எனவும் குறிப்பிட்டார்.

## நிறைவு விழா

கொக்குவில் கலைக்கோயில் அமரகலா நாட்டியாலயத்தின் 15ஆவது ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகள் நாட்டியாலய நடன ஆசிரியை செல்வி ஜிற்னீஸ் செல்லையாவின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளுடன் இன்று (92-08-20) கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 20

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் / பூநகரி பரமன்கிராய் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தந்தை மகன் ஆகிய இரண்டு தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பளை - இத்தாவில் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
பளை பிரதேசப் பொறுப்பாளர்
**லெப். சமுத்திரன்** [சண்முகம் சந்திரமோகன் - திருக்கோணமலை]

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -
**கப்டன் கரீம்**

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தாந்தாமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**கமால்** (சின்னையா சபாரத்தினம்- கோயில்போரதீவு, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**மைக்கல் ராஜ்** [சின்னத்தம்பி வினாயகமூர்த்தி - கோயில்போரதீவு, மட்டக்களப்பு]

மட்டக்களப்பு 40-ம் கொலனிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
**முகிலன்** (புத்தன் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு)

யாழ். வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணு

முன்னர் கல்விச்சேவைச் சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்கள் 14-8-92ஆம்திகதிய வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை கலந்துரையாடி அது தொடர்பான தீர்மானங்களை எடுத்து அதனைத் தீர்க்கும் நோக்கமாக, பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான 'கலந்துரையாடல்' இன்று 20-08-92 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (22)

## இலங்கை வங்கி கருமபீடம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி இலங்கை வங்கி, மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம் தனது கருமபீடமொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் 28 - 08 - 92 வெள்ளிக்கிழமை வரை நல்லூர் கந்தசுவாமி கோவீல் நாவலர் மண்டப வளாகத்துள் அமைத்துள்ளது. இக்கருமபீடத்திற்கு வருகை தந்து இலங்கை வங்கி, ஆற்றும் சேவைகளான சேமிப்புச் சான்றிதழ்கள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், சாதாரண சேமிப்புக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள், நிரந்தர வைப்புகள், வெளி நாட்டு வங்கிச் சேவைகள், மகளிர் பொற் கணக்குகள் ஆகியவற்றை அறிந்து பயன் பெறுமாறு வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வங்கி பிரதான முகாமையாளர் கேட்டுள்ளார்.

---

மு.ப 11-00 மணி கலந்துரையாடல்
ந.ப 12.00 மணி மன்றாட்டு ஜெபம்
பி.ப 3.30 பகிரங்கக்கூட்டம்

இவ்விழாவிற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம் உங்கள் நண்பர்களையும் அழைத்து வாருங்கள்.


(3015) வண சேவக் சாம் T. அல்பிரட்

---

43-ம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும்

வீரப் பிறப்பு 06 – 12 – 1969



வீரச் சாவு 09 – 07 – 1992

## லெப்டினன்ட் தமிழ்மாறன்

(நெல்லிநாதன் விவேகானந்தன்)

பந்தமொரு பாசம் விடுத்துப்
பட்டப்படிப்பும் துறந்து
வந்த பகை ஈழம் மீது
வதைத்திடப் புலியாயெழுந்து
தந்தனன் தன்னுயிரைத்
தற்கொடையாய்த் தமிழ்மாறன்
சொந்தமென அவன் நாமம்
சொல்லும் தினம் தென்றலிங்கு!

கடந்த 09-07-92 அன்று வீரச்சாவடைந்த எமது குடும்ப உறுப்பினர் நெ. விவேகானந்தனின் ஆத்மசாந்திக்காக 20-08-92 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

– குடும்பத்தினர்.

(3045)

---

வர்த்தன பேசும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இரட்டை நாக்குடன் பேசி ... மாட்டோம் மக்களின் முன் உண்மையைக் வெளிக்கொண்டுவருவோம் எனவும் தெரிவித்தார்

---

கண்டி மாநகரசபை எல்லைக்குள்

# அனுமதியின்றி கட்டடம்; மத்திய வங்கியிடம் தண்டம்

(கண்டி)

கண்டி மாநகரசபை மத்திய வங்கிக்கு முப்பது லட்சத்து இருபதினாயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது. கண்டி மாநகரசபை எல்லைக்குள் அதன் முன்அனுமதியின்றி மத்திய வங்கி கட்டடம் ஒன்றைக் கட்டிய குற்றத்திற்காகவே இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது

கண்டி ராஜசிங்க மாவத்தையில் மத்திய வங்கி விடுமுறை விடுதி ஒன்றை அனுமதியின்றி கட்டியபோது கண்டி மாநகர சபை அதில் தலையிட்டுக் கட்டிட வேலைகளை நிறுத்தியதோடு, தண்டத்தையும் விதித்தது. தண்டப்பணத்தை மத்திய வங்கி கண்டி மாநகர சபைக்குச் செலுத்தியது.

இதே இடத்தில் மத்திய வங்கி இப்போது ஒருபிரதேசக் காரியாலயத்தைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்கான அனுமதிக்கும் மத்திய வங்கி காலந் தாழ்த்தியே விண்ணப்பித்ததாகக் கண்டி மாநகரசபைத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# கணக்காளர் நாயகத்தின் அறிக்கைகுறித்துவிசாரணை

(கொழும்பு)

மத்திய வங்கி தொடர்பாகக் கணக்காளர் நாயகம் விடுத்த சர்ச்சைக்குரிய அறிக்கை பற்றி அரச நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக்குழு விசாரணை மேற்கொண்டுள்ளது.

இந்த விசாரணைக்குழுமுன் சாட்சியமளிக்க மத்திய வங்கி அதிகாரிகளும் அழைக்கப்படவுள்ளார்கள் கணக்காளர் நாயகம் தனது ஆண்டறிக்கையில் மத்திய வங்கி பற்றித் தெரியப்படுத்தியிருக்கும் சில குறைகள் பற்றி விளக்கம்பெற முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் இப்போதைய மத்திய வங்கி ஆளுநரும் விசாரணைக்குழுமுன்னால்அழைக்கப்படவுள்ளார்கள்.

மேலும், பாராளுமன்ற விசாரணைக்குழுவில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இக்குழு நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதாரதிணைக்களஊழியர் சீருடைகள் வழங்கப்படும்

யாழ்.சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கும் மற்றும் யாழ். பிராந்திய அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் இவ்வருடத்திற்கான (1992) உத்தியோகபூர்வ சீருடைகள் இவ்வாரம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினர் சீருடைகளை வாகனம் மூலம் சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் நேரடியாககொண்டுசென்றுவழங்கி வருவதாக யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (42)

---

**முகிலன்** (புத்தன் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு)

யாழ். வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**பகவான்** [சின்னத்தம்பி சதீஸ்வரன் - கோண்டாவில்]

**நவம்** (மகாலிங்கம் மோகன் - ஊரெழு கிழக்கு, சுன்னாகம்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட தளவாயைச் சேர்ந்த 2 கூலித்தொழிலாளர்- சித்தாண்டியைச் சேர்ந்த விவசாயி, மற்றும் ஐயங்கேணியைச் சேர்ந்தவர் ஆகிய 4 தமிழர்கள்- ஏறாவூரில் உயிருடன் தீ மூட்டிக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

கிளிநொச்சியில், சிறிலங்காப் படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட யாழ். வசாவிளான் அச்சுவேலிப் பகுதிகளைச் சேர்ந்த இருவர் உட்பட 4 தமிழர்கள்- ஆனையிறவு கொம்பன் வெளிப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

யாழ்-அராலிப்பகுதியில், சிறிலங்காப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இரண்டு தமிழர்கள் - வேலணை கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர்.

1991 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய-

**ஆனந்** (முத்துகிருஸ்ணன் குணாளன்- புளியங்கூடல் வேலணை, யாழ் )

மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லூக்காஸ்** (சோ. கருணாகரன்- அக்கரைப்பற்று, அம்பாறை)

மட்டக்களப்பு கொடுவாமடுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**றிச்சாட்** (செல்வகுலச்சந்திரன்- இலுப்பையடிச்சேனை மட்டக்களப்பு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போதுவிழுப்புண்அடைந்திருந்து வீரச்சாவெய்திய

**கிலக்ஸ் / டிலக்ஸ்** (சின்னையா ராஜேந்திரன்- புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4913]

### சிந்தனைக்கு

கடமையைச் சரிவர ஆற்றும் போது,
அதில் அச்சத்துக்கு இடம் இல்லை.
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## செஞ்சிலுவையின் கடப்பாடு

மண்டைதீவுக் கரையோரத்தில் இருந்து சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட 50 கலிபர் தாக்குதலின் போது, யாழ். போதனாவைத்தியசாலையை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினுள் துப்பாக்கிச் சன்னங்கள் தொடர்ச்சியாக புகுந்தன. இதனால், பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த பல கடைகள் சேதமானதோடு, வாகனம் ஒன்றும் சேதமடைந்தது.

யாழ். போதனா வைத்தியசாலைப்பகுதி சிறிலங்கா அரசாங்கம் - விடுதலைப்புலிகள் -சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றிற்கு இடையில் ஏற்பட்ட முத்தரப்பு உடன்பாட்டின் அடிப்படையில் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்ட பகுதியாகும். இவ் உடன்பாட்டை இதுவரை விடுதலைப் புலிகள் மீறியதாக இப்பகுதியை நேரடியாகக் கண்காணித்துவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் குற்றச்சாட்டு எதையும் முன்வைக்கவும் இல்லை. அதாவது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ள பகுதியாக இது இருப்பினும், புலிகள் உடன்பாட்டை மீறாது கடைப்பிடித்து வருவதனையே இது காட்டுவதாகவுள்ளது.

இந்நிலையில், உடன்பாட்டையும் மீறி சிறிலங்கா இராணுவம் பாதுகாப்புவலயத்தினுள் தாக்குதல்நடத்தியுள்ளது. ஆனால்சிறிலங்கா ஆயுதப்படையினர் இப்பாதுகாப்பு வலயத்தினுள் தாக்குதல் நடத்தியது இதுதான் முதற்தடவையல்ல. இதற்கு முன்னர், பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்திய குறுகிய காலத்தினுள் விமானப்படை விமானங்கள் இப்பகுதிக்குள் குண்டுவீச்சுத்தாக்குதலை நடத்தியிருந்தன.

அத்தோடு, சிறிலங்காஇராணுவம் தாம் ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு வலயங்கள், யுத்த தவிர்ப்புப் பிரதேசங்கள் எனப்பிரகடனப்படுத்திய பகுதிக்குள் பின்னர்தாக்குதல்நடத்துவதும், அப்பகுதியை கைப்பற்றமுற்படுவதும் அதன்வழமையான நடவடிக்கைகளில் ஒன்றே. இதற்கு முன்னர், காங்கேசன்துறை துறைமுகத்தை திறப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டை சிறிலங்காராணுவம்முற்றாகமீறியது. இவ் உடன்பாட்டின்படி யுத்த தவிர்ப்பு பகுதியாகப் பிரகடனப்படுத்தி நிலக்கண்ணிகள் அகற்றப்பட்ட சேந்தான்குளப்பகுதியை சிறிலங்கா இராணுவம் கடந்த யூன்மாத ஆரம்பத்தில் எந்தவித முன்னறிவித்தலுமின்றி தாக்குதல் ...

# அ. தி. மு. க - காங்கிரஸ் தேனிலவு; மூப்பனார் கனவால் உடையுமா?

தமிழகத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன் விழா கொண்டாட்டங்களின் போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் உறுதி பூண்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

''காமராஜர் காட்டிய வழியில் தமிழகத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு காங்கிரஸ்காரர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்'' என்று தான் சத்தியமூர்த்தி பவனில் வாழப்பாடி இராமமூர்த்தி குழு ஏற்பாடு செய்த வைபவத்திலும், மூப்பனார் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த வைபவத்திலும் பேசிய காங்கிரஸ் கட்சியினர் குறிப்பிட்டனர்

1972க்குப் பிறகு தமிழ்நாடு கூட்டணி அரசியலையே கண்டு வந்திருக்கிறது. தி.மு.க.வுடன் அல்லது அ. தி. மு. க. வுடன் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்து தேர்தல்களில் போட்டியிடுவதே நடைமுறையாக இருந்து வருகிறது அ. தி. மு க. வுக்கும் காங்கிரசுக்கும் இடையிலான கூட்டணி எம். ஜி. ஆரினாலும் இந்திரா காந்தியினாலும் அமைக்கப்பட்டது. 1980 களில் இரு சந்தர்ப்பங்களில் தேர்தல் கூட்டில் விரிசல்கள் தோன்றிய போதிலும், ராஜீவ் காந்திக்கும், ஜெயலலிதாவிற்கும் இடையே இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டதன் பின்னர் இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவு இறுக்கமானதாகவே இருந்து வந்தது.

எம். ஜி ஆர்., இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி மூவரும் இன்றில்லாவிட்டாலும், அவர்களால் வளர்க்கப்பட்ட கூட்டணி தொடர்ந்து நிலைக்க வேண்டுமென்றே அ. தி. மு. க. விரும்புகிறது. மத்தியில காங்கிரஸ் ஆட்சி, மாநிலத்தில் அ.தி.மு.க. ஆட்சி என்பதே அந்த விளக்கப்பாட்டின் முக்கிய அம்சம்.

ஆனால் தமிழக காங்கிரஸ் காரரோ தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரவேண்டும் என்றும் அதுவும் மூப்பனார் தலைமையிலான ஒரு அரசு அமையவேண்டும் என விரும்புகிறது.

வெள்ளையனே வெளியேறு பொன் விழாவில்பேசிய மூப்பனார்ஆதரவாளரானதிண்டிவனம்இராமமூர்த்தியும்ஏனைய சிலரும் தற்போதைய அ.தி. மு.க. அரசைக் கண்டித்து பேசினர். மாநிலத்தில் சட்டம் ஒழுங்குநிலைமைசீர்கேடடைந்திருப்பதாகவும், சமூக மற்றும் பொருளாதாரத் துறைகளில் அரசின் செயற்பாடு சரியான



தாக இல்லை என்றும் குற்றஞ் சாட்டினர் ஆளும் கட்சியான அ.தி.மு.க தவறு இழைக்கும் சந்தர்ப்பங்களில் காங்கிரஸ்காரர்களில் சிலர் கண்டிக்காமல் இருப்பதாகவும் அவர்கள் குறை கூறினர்.

தேச பக்த உணர்வை மீண்டும் ஏற்படுத்த தமிழகத்தில் மூப்பனார் பெரும் பங்காற்ற வேண்டும் என்றும் நாட்டையும் குறிப்பாக மாநிலத்தையும் சரியான திசையில் வழி நடத்திச்செல்ல மூப்பனாரின் பங்கு அவசியமானது என்று மத்திய அமைச்சர்களான எம் ஏ.எச் பாரூக்கும் அருணாசலமும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனர்.

### அ.தி.மு.க.வின் நிலைப்பாடு

இந்நிலையில் அ.தி.மு.க. லோக்சபாவில் அ.தி.மு.க எதிரணி வரிசையில் இருந்து செயற்படுவதைப்போல தமிழக சட்டசபையில் காங்கிரஸ் எதிர்க்கட்சிப் பாத்திரத்தை வகிக்க வேண்டும் என விரும்புகிறது. இத்தகைய பங்கைகாங்கிரஸ் அதற்கு ஏதுவான வகையில் ஆக்க பூர்வமாக வகிப்பதை அ.தி மு.க தடுக்கவில்லை என்றும் அதேபோல லோக்சபாவில் அ.தி.மு க. வும் அதற்கு ஏதுவான முறையில் செயற்படலாம் என்றும் விரும்புகிறதாம்.

ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் வேறு விதமாக உணர ஆரம்பிப்பார்களே யானால் எந்த வகையான தீர்மானத்தையும் எடுப்பது அவர்களைப் பொறுத்தது ஆனால் அ.தி மு.க. தானாகவே உறவுகளை முறித்துக் கொள்ளாதுஅ தி.மு.க.வுக்கும் காங்கிரசுக்கும் இடையிலான கூட்டில் முறிவு ஏற்பட்டால் தோன்றும் சூழ்நிலையில் எவ்வாறு செயற்படுவதென்பதற்கான தந்திரோபாயத்தை அ. தி.மு.க. அதன் சொந்தத்தில் வகுத்துக் கொள்ளும் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் அண்மைக் காலமாகச் செய்து வரும்அறைகூவல்களையும் பிரகடனங்களையும் பொறுத்தவரை அவர்கள் உண்மையில் அக்கறையுடன்தான் அவ்வாறு செய்கின்றார்களா அல்லது காங்கிரசிற்குள் இப்போது கோஷ்டிப் பூசல் தீவிரமடைந்திருக்கும் நிலையில் ஒரு குழுவினர் மறு குழுவினரை விட வெற்றி பெறும் நோக்கிலேயே இத்தகைய அறிவிப்புகளைச் செய்கிறார்கள் என்றே அ.தி.மு.க. வின் மத்திய மட்டத்தவர் நினைக்கிறார்கள்.

பொதுவில் காங்கிரஸ்காரரின் 'தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சியை ஏற்படுத்த வேண்



டும்' என்ற அறைகூவலை ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. கலவரம் அடைந்ததாகத் தெரியவில்லை என்றே கூறப்படுகிறது.

### தி. மு. க. வின் குதூகலம்

இவ்வாறாகக் காங்கிரஸ் காரர்களின் அறிவிப்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒருவித குதூகலத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தமிழகத்தில் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்காங்கிரஸிற்கும் இடையிலான கூட்டணியில் விரிசல் ஏற்படக் கூடிய அறிகுறிகள் அதிகமாகத் தென்பட ஆரம்பித்திருக்கும் நிலையில் அ.தி. மு. க. வை அதிகாரத்தை விட்டுத் துரத்தியடிக்கும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்குமென்ற எதிர்பார்ப்பில் தி. மு. க வினர் இருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாகவும், ஊழல் தலைவிரித்தாடுவதாகவும் தமிழக காங்கிரஸின் மூப்பனார் குழுவினர் ஜெயலலிதா அரசுக்கு எதிராகத் தொடுத்திருக்கும் மூர்க்கமான தாக்குதல்களும், அ. தி. மு. க. விற்கு ஒரு மாற்றுக் கட்சியாக காங்கிரஸைக் காணும் வாழப்பாடி இராமமூர்த்தி குழுவினரின் அபிலாசைகளையும் ஆளும் கட்சிக்கு எதிரான தி மு.க.வின் பிரசாரத்துக்கே புத்தூக்கத்தை அளித்திருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

தமிழக அரசியல் அரங்கில் புதிய மாற்றங்கள் விரைவில் தோன்றும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்களாகவே தி. மு. க.வினர் இருக்கிறார்கள்.

அ. தி. மு. விற்கும்—காங்கிரசுக்கும் இடையிலான கூட்டணியில் முறிவு ஏற்படுமேயானால் தி. மு. க. காங்கிரசுடன் கூட்டுச் சேருமா என தி. மு. க, தலைவர் ஒருவரிடம் பத்திரிகையாளர்ஒருவர் வினா எழுப்பிய போது ''தமிழ் நாட்டில் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய கூட்டணியின் வடிவம் குறித்து இப்போது எம்மால் எவ்வாறு ஆரூடம் கூறமுடியும்? சகல விதமான மாற்று வழிகளையும் காண்பதற்கான நிலையில் நாமிருக்கிறோம். ஆனால் அதிகாரத்தைக் கையில்எடுக்க வேண்டும் என்பதற்காக எமது தனித்துவமும் சுயமரியாதையும் பாதிக்கப்பட நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை'' என்று பதில் அளித்தார்.

மத்தியில் ஜனதாதள்ளில் மேலும் பிளவு ஏற்பட்டிருப்பதையும்காங்கிரஸிற்கு நெருக்கமாகச் செல்ல இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் மேற்கொள்ளும் முயற்சிகளையும் தி. மு. க. உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

இந்த நிலைமைகளும் அ. தி. மு, க. - காங்கிரஸ் கூட்டணியில் ஏற்பட்டிருக்கும் சஞ்சலமான நிலைமையும் தி.மு. க. அதன் தந்திரோபயங்களை மாற்றிக் கொள்ள வழி வகுக்கக் கூடும்.

தொகுப்பு: வீரகேசரி

# தி. மு. க. வை ஒழித்திருக்கிறோம்; அது ஒன்றே பெரு வெற்றி

**- வாழப்பாடி ராமமூர்த்தி**

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழ...

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை

# தமிழக அரசு ஏற்கக் கோரி மாணவர் உண்ணாவிரதம்

(சென்னை)

சென்னை சிறீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை ...

தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

...டனப்படுத்தி நிலக்கண்ணிகள் அகற்றப்பட்ட சேந்தான்குளப்பகுதியை சிறிலங்கா இராணுவம் கடந்த யூன்மாத ஆரம்பத்தில் எந்தவித முன்னறிவித்தலுமின்றி தாக்குதல் நடத்திக் கைப்பற்றியது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கென பெரும் முஸ்தீபு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் இராணுவம் தற்பொழுது பாதுகாப்பு வலயத்திற்குள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளது. யாழ். குடநாட்டை யுத்த மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில் மேற்கொள்ளப்படும் இத்தாக்குதல் குறித்துப் பாதுகாப்பு வலயத்தைக் கண்காணித்து வரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று வடமாகாணத்தில் உள்ள ஓரளவேனும் வசதியுடைய வைத்தியசாலையாக யாழ்.போதனா வைத்தியசாலை ஒன்றே உள்ளது. இவ்வைத்தியசாலையில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனைய வைத்தியசாலைகள் நோயாளருக்குப் போதிய சேவையை வழங்கக் கூடிய வசதி கொண்டவையாக இல்லை. அல்லது, இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளன.

மேலும் போர் அபாயம் சூழ்ந்துள்ள நிலையில் மக்கள் பெருமளவில் காயப்படவும், நோய் வாய்ப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. இந்நிலையில், இவ் வைத்தியசாலையைத் தொடர்ந்து பேணுவதும் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய நிலையில் வைத்திருக்க வேண்டிய கடப்பாடு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு உண்டு.

சிறிலங்கா அரசாங்கம் எக்காலத்திலுமே தமிழ் மக்களுடன் அல்லது, தமிழர் தொடர்பாகச் செய்து கொள்ளும் எந்த ஒப்பந்தங்களையும் கடைப்பிடிப்பது இல்லை. இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை தொடர்பான முத்தரப்பு உடன்பாடு பேணப்படுவதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே உறுதிப்படுத்தத் தீவிர அக்கறை காட்ட வேண்டும்.

இது தமிழ் மக்களின் கோரிக்கை மட்டுமல்ல. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கடப்பாடும் கூட. அதாவது முத்தரப்பு உடன்பாட்டின் ஒருதரப்பாக இருப்பதால் மட்டுமல்ல துன்புறும்மக்களுக்கு சேவையாற்றுவதே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அடிப்படை நோக்கமாக இருப்பதினாலும் ஆகும். இதில் செஞ்சிலுவைச்சங்கத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டை சிறிலங்கா அரசாங்கம் மீறுமானால் அதனை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பும் அதற்குண்டு.

## - வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணைசெய்யவென தமிழகஅரசு ஆணைக்குழு நியமித்திருப்பது ஜெயலலிதா எடுத்திருக்கும் காத்திரமான நடவடிக்கை என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி பாராட்டியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சவப்பெட்டியில் அறையப்படும் கடைசி ஆணி இது எனத் தெரிவித்த வாழப்பாடி இராமமூர்த்தி

கருணாநிதியின் ஊழல் குற்றச் சாட்டுக்களையும் பாசாங்குத் தனத்தையும், தி.மு.க.வினர் தொடர விரும்பிய குடும்ப ஆட்சியையும் இந்த ஆணைக்குழு அம்பலப்படுத்தும் என்றார்.

ஆணைக்குழுவுக்கு எமது உதவி தேவையானால் அதற்கு நாம்தாராளமாக உதவ தயாராகஇருக்கிறோம். தி.மு.க. தலைமைத்துவத்தை, அம்பலப்படுத்த மக்கள் உதவவேண்டும் எனவும் கூறினார்.

மேலும்நான் தமிழ்நாடுகாங்கிரஸின் தலைவர்பதவியைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஆளும்கட்சிக்கு மாற்று எதிர்க்கட்சியாக தமிழகத்தில் அதை வளர்த்திருக்கிறேன். தி.மு.க.வை ஒழித்துக்கட்டியிருக்கிறோம். அது ஒன்றே பெரு வெற்றியாகும். அ. தி. மு. க. வுடனான கூட்டணி காங்கிரஸுக்கும் அ.தி.மு.க.வுக்கும் பாதுகாப்பான ஒன்று எனவும் தெரிவித்தார்.

திண்டிவனத்தில்நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனும் தொடர்பிருப்பதாகக் கருணாநிதியை குற்றம் சாட்டியதுடன் தி மு க. வை ஆட்சியில் தொடர அனுமதித்திருந்தால் இந்தியப் பிராந்தியத்தில் இருந்து தமிழ்நாடு துண்டிக்கப்பட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டார்,

## சேலம் மாவட்ட விபத்தில் இருபது பேர் உயிரிழப்பு

(சென்னை)

சேலம் மாவட்டத்தில் பேருந்து ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் இருபது பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

சேலத்திலிருந்து குளத்தூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இத்தனியார் பேருந்து புளியம்பட்டி கிராமத்தில்பாதசாரி ஒருவரை மோதிவிடாமல் தவிர்ப்பதற்காக சாரதி பேருந்தை ஒடித்து திருப்பிய போது அருகிலிருந்த பாலத்தில் வேகமாக மோதுண்டு டிசல் டாங்க் வெடித்து தீப்பற்றி விபத்து சம்பவித்ததாக தெரிய வருகிறது. இச்சம்பவத்தில் பயணம் செய்தவர்களில் பதினாறு பேரும், பாதையில் இருந்த நான்குபேரும் உட்பட இருபது பேர் மரணமடைந்துள்ளனர்.

## ஜனாதிபதியுடன் பேச்சு

(டில்லி)

இந்தியாவுக்கு வந்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் ஷரியாகான் இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

### அயோத்தியா விவகாரம் குறித்து

## முஸ்லிம் தலைவர்களுடன் இந்தியப்பிரதமர் பேச்சு

அயோத்தியா விவகாரத்தில் சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்காக பிரதமர் பி.வி நரசிம்மராவ் நேற்று முன்தினம் முஸ்லிம் தலைவர்களில் ஒருவரான மௌலானா அலிம் யானுடன் பேச்சுககள் நடத்தியுள்ளார்.

முஸ்லிம் லீக் தலைவர் சுலைமான் சேட்டுடனும், ஏனைய அரசியல் கட்சிகளிலுள்ள முஸ்லிம் தலைவர்களோடும் பிரதமர் முன்பு பேச்சுககள் நடத்தியிருப்பது தெரிந்ததே.

இதனிடையே பாபர் மசூதி கட்டிடத்துக்கு அருகே உத்தரப் பிரதேச அரசினால் கையகப்படுத்தப் பட்டிருக்கும் நிலத்தில் உயர் நீதிமன்றத்தில் மூன்று உறுப்பினர் கமிஷன் பல்வேறு சோதனைகளையும் நடத்தி முடித்துள்ளது. இங்கு எடுக்கப்பட்டுள்ள மாதிரிகள் யாவும் புதுடில்லியில் ஆய்வுகூட சோதனைக்கு உள்ளாக்கப்படுமெனவும். இருவார காலத்தில் இக்குழுவின் அறிக்கை தாக்கலாகும் என்றும், அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## 'இல. அகதிகள் விடயத்தில் மனிதாபிமானம் தேவை'

– வி. பி. சிங்

(சென்னை)

இலங்கைத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் விவகாரத்தில் ஒரு மனிதாபிமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என கடந்த வாரம் சென்னையில் பத்திரிகையாளர்மாநாடொன்றில் உரையாற்றிய முன்னாள் பிரதமர் வி.பி.சிங் தெரிவித்தார்.

நரசிம்மராவ் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையைக் கடுமையாக தாக்கியதுடன் அவரது பொருளாதாரக் கொள்கையில் விவசாய அபிவிருத்திக்கே இடமில்லை என தெரிவித்தார்.

மேலும் ஜெயலலிதாவின் தமிழ்நாடு அரசாங்கம் அரச சொத்துக்களில் தான் கூடுதல் அக்கறையாக இருக்கிறது.

இந்திய உற்பத்தியாளர்களின் நலன்களை பாதுகாக்கக் கூடிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை கடைபிடிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி கிளர்ச்சிப் போராட்டம் ஒன்றை ஜனதாதள் கட்சி ஆரம்பிக்கும் எனவும் சிங் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

(சென்னை)

சென்னை சிறீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை மீண்டும் தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும் என்று கோரி சென்னை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் காலவரம்பற்ற உண்ணாவிரதம் ஒன்றை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

இதே வேளை வேறு சில கோரிக்கைகளை முன்வைத்து சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை முன்பாக பதினைந்து மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

## பாட்டாளி மக்கள் கட்சி உண்ணாவிரதப் போராட்டம்

சிறி இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தமிழ்நாடு அரசு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரி பாட்டாளி மக்கள்கட்சியினர், அக்கட்சியின் தலைவர்கள் டாக்டர் எஸ் ராமதாஸ், எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் தலைமையில்நேற்றுமுன்தினம் சென்னைநகரில் உண்ணாவிரதம் இருந்தனர். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

மாநிலத்திலுள்ள அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களையும் தமிழ்நாடு அரசு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## ஆப்கான். வன்முறை பாக்--இந்தியா கவலை

(டில்லி)

ஆப்கானிஸ்தானில் தற்போது நிலவும் வன்முறைச் சூழல் குறித்து இந்தியாவும், பாகிஸ்தானும் கவலை தெரிவித்துள்ளன. புதுடில்லியில் நடைபெறும் இந்திய பாகிஸ்தான் அரசுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தில் இந்தக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பு நட்புச் சூழலில் நடைபெற்றதாக கூறிய இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகள், மத்திய ஆசியாவில் நிலவும் சூழல், அணிசேரா இயக்க மாநாடு, தென்னாசியப் பிராந்திய மாநாடு என்பன தொடர்பர்கவும் பேசப்பட்டதாக தெரிவித்தார்.

### சுதந்திரம்?

அரபு ஆட்சியாளர்கள் என்றைக்குமே வழங்காத சுதந்திரம் அன்றாட நடவடிக்கைகளைப் பாலஸ்தீனியர் பெறுவதற்குத் தனது திட்டம் வழி வகுக்குமென இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக்ராபின் கூறியுள்ளார்.

# ஈழநாதம்

## பிரேமதாசா அரசாங்கத்தால் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது

**– லலித்**

(மாத்தறை)

''இன்றைய அரசாங்கம் பதவியிலிருக்கும் வரை வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு ஏற்படாது. வடக்குக் கிழக்குப் பிரச்சினையை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் அரசாங்கத்தை மாற்றி அமைக்க வேண்டும்.''

இவ்வாறு கடந்த புதன் கிழமை மித்தெனியவில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசாரக்கூட்டத்தில் பேசிய லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

நாட்டின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கப் போர் முனையில் உயிர்த்தியாகம் செய்த டென்சில் கொப்பேகடுவ உட்பட பத்து இராணுவ அதிகாரிகளுக்காகத் துக்கதினத்தைப் பிரகடனம் செய்ய முடியாத ஓர் அரசாங்கம் இனியும் எமக்குத் தேவையா? இக்கேள்வியை ஒவ்வொருவரும் தமது இதயத்தில் வைத்துக் கேட்டு அவர்களே அக்கேள்விகளுக்குப் பதில் கூறிக் கொள்ளட்டும்.

உயிர்துறந்த வீர இராணுவத் தியாகிகளுக்காகப் பொது மக்களே முன்வந்து வெள்ளைக் கொடிகள், பதாகைகளைக் கட்டியும், கடைகளை மூடியும் துக்கம் அனுஷ்டித்தனர். இதே வேளை நாட்டின் தலைவர் தம்புள்ளையிலே வேறு பல நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார்.

இன்று ஜனாதிபதிக்குத் தேவை விளம்பரம். அவருக்கு மக்களைப் பற்றி எந்தக் கவலையுமில்லை. எல்லோரையும் விட அதிகமாகப் பேசுபவர் அவரே. அரசாங்கத்திற்கு எதிராக இன்று எவருக்கும் பேசமுடியாத நிலை. விமர்ச்சிக்க முடியாத நிலை. அவ்வாறு செய்தால் அடுத்தநாள் அப்படிச் செய்தோர் தூக்கிச் செல்லப்பட்டு விடுகிறார்கள்.

படித்தோரை, மூளைசாலிகளைக் கண்டால் ஜனாதிபதிக்கு அச்சம். தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற எண்ணம் அவருக்கு. மனிதன் சகலதும் தெரிந்தவன் அல்ல. அவன் சாகும்வரை படிக்க வேண்டியவன் என்ற தத்துவத்தை அவர் மறந்து விட்டார்.

புலிகளுக்கு ஆயுதங்களை மாத்திரமல்ல, செய்திகள் பரிமாறும் சாதனங்கள், பங்கர்களை நிறுவச் சீமெந்து ஆகியவற்றை அரசு வழங்கி இருப்பது நிரூபணமாகி விட்டது என்றும் லலித் தெரிவித்தார்.

## சிவா கைது

(சென்னை)

பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தின் கீழ் (டடா) தற்பொழுது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள வரதன் என்பவரின் நெருங்கிய நண்பரான சிவா என்ற இலங்கையர் சருருக்கு அருகில் வேலாயுதம் பாளையம் என்ற இடத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பொலிசார் இந்த இடத்தை சுற்றிவளைத்துத் தேடிய போதே இவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 10,000 தோட்ட தொழிலாளர் அடையாள வேலைநிறுத்தம்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்த 10,000 தொழிலாளர்கள் கடந்த திங்கட் கிழமையன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளனர் என தெரிய வருகின்றது.

இது பற்றி மேலும் அறிய வருவதாவது, ஒலியன்ற் தோட்டத்தைச் சேர்ந்த 800 தொழிலாளர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்து வருகின்றார்கள்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்தே நுவரெலியா மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் மேற்படி ஒருநாள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

## கருணாநிதி ஊழல் விசாரணை

## விசாரணைக்குழுத் தலைவர் அரசின் வழக்கறிஞரல்ல

### அ. தி. மு. க. அமைச்சர்

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி மீதும் அவர் குடும்பத்தினர் மீதும் சாட்டப்பட்டிருக்கும் ஊழல் குற்றச் சாட்டுகள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவர் சிவசுப்பிரமணியம் தமிழக அரசின் வழக்கறிஞர் அல்ல என்று மாநில சட்டத்துறை அமைச்சர் கிருஷ்ணசாமி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கைஒன்றில், இது சம்பந்தமாகக் கருணாநிதி தெரிவித்திருக்கும் கருத்தை மறுத்திருக்கும் அவர், 1988 நவம்பரில் மநில அரசு உருவாக்கிய வழக்கறிஞர் பட்டியலில் அவர் பெயர் இடம்பெறவில்லை என்று தெரிவித்திருக்கிறார். ஆனால் மண்டல் ஆணைக்குழு சம்பந்தமாக மாநில அரசின் பிரதிநிதியாக உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மாநில அரசு சிவசுப்பிரமணியத்தைக் கேட்டுக்கொண்டுள்ளதுஎன்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

## கூச்சலிடும் போட்டியானால் பதக்கங்கள் குவியும்

''அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கூச்சலிடும் போட்டி இடம் பெற்றால் நிச்சயமாக இலங்கை தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை தட்டிக்கொண்டு விடும்''

இவ்வாறு தகவல் துறை ராஜாங்க அமைச்சர் ஏ ஜே ரணசிங்க தெரிவித்துள்ளார்

இலங்கை மக்களிடம் இந்த திறமை ஒன்றுதான் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## கிராஸ் கொப்பர்ஸ் அணி அரை இறுதிக்கு தெரிவு

அரியாலை விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் நேற்று நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை கிராஸ் கொப்பர்ஸ் அணி அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிராஸ் கொப்பர்ஸ் அணி 5 விக்கெட் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்றது

தொடர்ந்து ஆடிய சென்ரலைட்ஸ் புறூஸ் அணி 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 71 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## இன்று

நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கின் இன்றைய நிகழ்ச்சியில் யசோதா செல்வராசா பாட உள்ளார். இவருக்கான பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் ஆர். எஸ். கேசவமூர்த்தியும், மிருதங்கம் கே. கண்ணதாசன் அவர்களும் பங்கேற்க உள்ளனர்.

வடபகுதி

தனது 19 ஆவது வயதில் தன்னை இராணுவத்தில் இணைத்துக்கொண்டு இங்கிலாந்திலுள்ள சண்ட்ஷர்ஸ் றோயல் இராணுவ கழகத்தில் பயிற்சி பெற்று 1962 இல் நாடு திரும்பியவர்.

தியத்தலாவ இராணுவ பயிற்சிநிலையத்தில் போதனாசிரியராக நியமனம் பெற்று 1967 இல் கப்டனாக பதவி

சிசிலின்

நிலையை உருவாக்கும்படி அரசால் பணிக்கப்பட்டார். அக்கால குழப்பத்தில் தனது சகோதரரை இழந்தவர் கேர்ணல் அல்கமாவும் இவரும் இரட்டையர்கள் ஜே. வி. பி. தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னாவுக்கு பிரதிதளபதியாக இருந்தவர். ஜே. வி. பி. காலத்தில் மேற்கு மாகாணத்தில் இவரது பிரதான நடவடிக்கை இருந்தது.

1990 பெப்ரவரியில் நடைபெற்ற பயங்கரவாத ஒழிப்பு சார்க் உடன்படிக்கை தொடர்பாக சார்க் நிபுணர்களின் மாநாட்டில் கலந்து கொண்டவர்.

இந்தியா, பாகிஸ்தான் அமெரிக்காவில் கெரில்லா யுத்தமுறை, புலன் விசாரணை பற்றி பயிற்சி பெற்றவர்.

1990 இல் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றுத் திரும்பிய தின் பின்னால் வடபிராந்திய பிரதித் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

புதிய தளபதி 1991 நவம்பரில் பதவியேற்றதும் கேர்ணல்

சுயதொழில்

அமைக்கப்பட்டு வருகின்றன

மேலும் வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு தென்னந் தும்புகைத்தொழில் நிறுவனமொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், சாவகச்சேரி முல்லைத்தீவு பகுதிகளில் தையல் பயிற்சி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறே விவசாய நடவடிக்கைகட்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி வழங்கி வருகின்றது.

பத்திரிகையாளர்

வளைந்துகொடுத்த பத்திரிகையாளர் இப்போது போர்க் கொடி உயர்த்தியுள்ளார். இதுவே மகத்தான விழிப்புணர்வு என்று கூறுகின்றார்.

ராணுவத்தின்

மேலும் இரண்டாவது ஈழ யுத்தத்தில் பாதுகாப்புப்படையினருக்கு ஏற்படும் இழப்புக்களைக் குறைக்கும் வழிவகைகளைப்பற்றி முப்படைகளின் தளபதிகளும் இப்போது கூடி ஆலோசனை செய்து வருவதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இதுவரை 1990 ஜூன் 11 ஆம் திகதியிலிருந்து 3,000 பாதுகாப்புப் படையினர் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகிக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அந்த

இக்கொலை மிரட்டலின் பின்னர் அவர் கத்திக்குத்துக்கு இலக்கானார் எனவே இது அரசின் திட்டமிட்ட செயல் என்பது தெளிவாகின்றது

கடும் வரட்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பதினெட்டு வருடம் காணாத கடுமையான வரட்சி நிலவுகின்றது

யுத்தம்

தும் முகமாகவும் கொழும்பு நகரமண்டபத்தில்நடைபெற்ற கூட்டத்தில், அவர் மேலும் பேசுகையில், வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறும் யுத்தத்தினால் பாதுகாப்பு உயர் அதிகாரிகளே சலுகைகளை அனுபவிக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்

இக் கூட்டத்தில் பேசிய ஐலன்ட் பத்திரிகையைச் சேர்ந்த அஜித் சமரநாயக்கா கூறுகையில் 1977க்கு முன்பு பதவியிலிருந்த அரசாங்கங்கள் மனிதப்படுகொலையில்ஈடுபட்டதாக தெரியவில்லை ஆனால் 1977க்கு பின்னர் பதவியிலிருக்கும் அரசாங்கம் படுகொலைகளை ஊக்குவித்து அதற்கென குண்டர் படைகளையும் தயார்செய்து வைத்துள்ளது. பத்திரிகையாளர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும், இந்த அரசு ஜனநாயகத்தை எவ்வளவுக்கு கடைப்பிடிக்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும் இந்தக் குண்டர்கள் பற்றி பொலிசில் புகார் செய்யப்படும் போதும் பொலிசார் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை

இக் கூட்டத்தில், விக்டர் ஐவன், சுனில் மாதவ, வஜிரா




வாங்கி விட்டீர்களா?

முந்துங்கள்!

இதோ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

தமிழீழ

எழுச்சிப்பாடல்கள்!

பிரதி ஒன்றின் விலை ரூபா. 20

திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள்

எழுதிய

இரண்டு தசாப்தங்களும்

புலிகளும்

பிரதி ஒன்றின் விலை ரூபா 12/-



பிரதி ஒன்றின் விலை ரூபா 12/-

**வவுனியா மாவட்டப் புள்ளி விபரம்**

பிரதி ஒன்றின் விலை ரூபா 60/-




குறைந்த விலை! நிறைந்த சேவை!

கவிதை, நாவல், இலக்கியம், அரசியல்
அனைத்து நூல்களும் பெற அரிய இடம்!
பாடசாலை உபகரணங்களுக்கும்
பாடசாலை நூல்களுக்கும் சிறந்த ஒரே இடம்

## தமிழ்த்தாய் புத்தகசாலை

(சி/4918)

191, மின்சார நிலைய வீதி, - யாழ்ப்பாணம்.

---

உ
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் ஆவணித்திங்கள் 7ஆம் நாள் (23-08-1992) ஞாயிற்றுக் கிழமை பகல் 10.48 மணிமுதல் 1.12 வரையுள்ள துலாலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| எமது கனிஷ்டபுத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **சி. விக்கினேஸ்வரன்** | **சி. கமலகுமாரி** |
| (B. B. A) - (*Hons*) | (B. A) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தில் மாங்கல்ய தாரணம் செய்ய திருவருள் கூர்ந்துள்ளமையால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகளின் (தற்காலிக) ''சரவண பவன்'' ஞானபண்டித மகாவித்தியாலய அருகாமை, கொக்குவில் மேற்கு, கொக்குவில் - இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

**திரு. நா. சின்னப்பு குடும்பத்தினர்**
இல. 78, பிரதான வீதி,
வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி.

**திரு. திருமதி சிவலிங்கம்**
இல.52, லோட்டஸ் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை, இருவீட்டாரின் அழைப்பு.) (305[illegible])

---

தியத்தலாவ இராணுவ பயிற்சிநிலையத்தில் போதனாசிரியராக நியமனம் பெற்று 1967 இல் கப்டனாக பதவி உயர்த்தப்பட்டவர்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சியில் மொனராகலையில் கடமையாற்றி 1972 இல் மேஜராக பதவியேற்றவர். 1978 இரத்தினபுரியில் ஆணையிடும் அதிகாரியாக நியமனம் பெற்ற இவர் அதன் பின் இந்தியாவில் பயிற்சி பெற்று மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றவர். இதன் பின்னரே கிழக்கு மாகாணஆணையிடும் பொது அதிகாரியாக நியமிக்கப்பட்டவராவர். திருமணமான இவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

பிரதித் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

புதிய தளபதி 1991 நவம்பரில் பதவியேற்றதும் கோர்ணல் அல்கம, தலைமையகத்திற்கு கொண்டுவரப்பட்டார். அங்கவீன இராணுவத்தினருக்கான வீடமைப்புத் திட்டத்தை வெள்ளவாயாவில் திறந்து வைத்தார்

ருகுணுகந்த என்ற இராணுவ சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த இவருக்கு இலக்கியத்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் அதிக ஈடுபாடு உண்டு.

இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு.

---

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஆரியகுளச் சந்திக்கு அருகாமையில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**எஸ். நாகராசா**
இல: 95, 1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(3054)

---

## நினைவு அஞ்சலிக்கூட்டம்

### லெப். மணிமாறன் (சர்மா)

வை. ரமணானந்த சர்மா

கடந்த 30-6-92 வீரச்சாவைத் தழுவிக்கொண்ட எம்மைந்தன் வை. ரமணானந்த சர்மாவின் (லெப் மணிமாறன்) நினைவு அஞ்சலிக் கூட்டம் நாளை 21-8-92 வெள்ளிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இதில் கலந்து கொண்டு அவரது ஆத்ம சாந்திக்காக வேண்டுமாறு நண்பர்கள், உறவினர், ஆதரவாளர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

''மதுரா''
ஆசாரியார் ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

வைத்தியநாதசர்மா
சொர்ணாம்பாள்

(3053)

---

பின்னர் அவர் கத்திக்குத்துக்கு இலக்கானார் எனவே இது அரசின் திட்டமிட்ட செயல் என்பது தெளிவாகின்றது என அத்த பத்திரிகையின் ஆசிரியர் ஏ பி ரூபசிங்க கூறியுள்ளார்

சார் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை

இக் கூட்டத்தில், விக்டர் ஐவன், சுனில் மாதவ, வஜிரா பெல்பிட்ட, சுசீதா திசாநாயக்கா உட்பட பலர் உரையாற்றியுள்ளனர்

---

## மரண அறிவித்தல்

### திரு. க. கதிர்காமு

[ஓய்வு பெற்ற அதிபர்]

கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திரு. க. கதிர்காமு அவர்கள் 19-08-92 அன்று காலமானார். இவர் சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், பேரின்பநாதன், சிவகுமாரன், உமாமகேஸ்வரன், திருமதி சிவரஞ்சிதம், திருமதி கமலாம்பிகை, செல்வி உமாதேவி ஆகியோரின் தகப்பனாரும், திரு. முத்துலிங்கம், திரு கிருஷ்ணசாமி, திருமதி கல்யாணி, திருமதி ஜமுனா ஆகியோரின் மாமனாரும், ஆதித்தன், சுதாமதி, ஐங்கரன், இராகுலன், சுபாசினி, நாமகள், அருண்ராஜ் ஆகியோர்களின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-08-92 (இன்று) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

[3049]

---

## உள் வந்த, வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

19.08.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5266

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்;-

41-2659, 42-8316, 24-7961, 41-9480, 42-2432, 40-2394, 26-5157, 22-5247, 27-9033, 26-6029, 26-1735, 26-5882, 52-3412

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.